செ.வெ.எண்.53 நாள்.20.04.2017.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரியில் ரூ.2.69 கோடி மதிப்பிலான புதிய நீதிமன்ற கட்டடத்தினை மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திரு.வி.பார்த்தீபன் அவர்கள் முன்னிலையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திரு.எஸ்.நாகமுத்து அவர்கள் திறந்து வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரியில் ரூ.2.69 கோடி மதிப்பிலான புதிய நீதிமன்ற கட்டட திறப்பு விழா இன்று (20.04.2017) நடைபெற்றது. இவ்விழாவில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திரு.வி.பார்த்தீபன் அவர்கள் முன்னிலையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திரு.எஸ்.நாகமுத்து அவர்கள் திறந்து வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட முதன்மை நீதிபதி திரு.ராஜசேகர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வா.விக்ரமன்,இ.கா.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

இவ்விழாவில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் அவர்கள் பேசியதாவது—

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரியில் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு, இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிவகிரி நீதிமன்றமானது குற்றவியல் மற்றும் உரிமையியல் ஆகிய இரண்டு வகையான வழக்குகளையும் விசாரித்து வருகிறது. பரப்பு மற்றும் மக்கள்தொகை நெருக்கம் போன்றவைகளால் வழக்குகள் அதிகரித்து, வழக்குகளின் தேக்கமும் அதிகரித்துள்ளது. சிவகிரி நீதிமன்றத்தில் மட்டும் 1290 குற்றவியல் வழக்குகளும், 1082 சிவில் வழக்குகளும் ஏறத்தாழ சமமான அளவில் நிலுவையில் உள்ளது. இப்படி வழக்குகள் அதிகரித்துக் கொண்டே வருவதால் ஒரு நீதிபதியால் வழக்குகளை முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, விரைவாக வழக்குகளை முடிப்பதற்கு தனித்தனியே நீதிபதிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே வழக்கறிஞர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மே மாதம் முதல் வாரத்திலேயே உரிமையியலுக்கு என்று தனி நீதிபதி நியமனம் செய்யப்பட்டு தனி நீதிமன்றமும் திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள், காவல் துறையினர் மற்றும் பல்வேறு அரசு துறையினர் தங்களுக்காக நீதிமன்றங்கள் உள்ளது என்று நினைக்கக் கூடாது. பொதுமக்களுக்காகவே நீதிமன்றங்கள் உள்ளது. ரவுடி உள்பட பல்வேறு குற்றவாளிகள் வந்து செல்லும் இடமாக நீதிமன்றங்கள் இருக்கக் கூடாது. மதுக்கடைகளை மூட உத்தரவிட்டது, பல்வேறு ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டது, தாமிரபரணி ஆற்றில் வெளிநாட்டு குளிர்பான நிறுவனங்கள் தண்ணீர் எடுப்பதற்கு தடை விதித்தது, தாமிரபரணி ஆற்றில் மணல் அள்ளுவதற்கு தடை விதித்தது உள்ளிட்ட தீர்ப்புகளால் எனது மனம் மிகவும் சந்தோஷம் அடைந்துள்ளது. பொதுமக்களும், வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தை முழுமையாக பயன்படுத்தி விரைந்து தீர்ப்பு வழங்கிட ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சிவகிரி நீதிமன்றம் அருகில் பேருந்து நிறுத்தம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திரு.எஸ்.நாகமுத்து அவர்கள் பேசினார்கள்.

சிவகிரி நீதிமன்றம் ரூ.269.17 இலட்சம் மதிப்பில் 15064 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல்தளம் உள்பட இரண்டு தளங்களாக கட்டப்பட்டுள்ளது.

இவ்விழாவில், தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.வெங்கடேஷ், பொதுப்பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.குமரேசன், செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், சிவகிரி வழக்கறிஞர்கள் சங்க தலைவர் திரு.செல்வகுமார், செயலாளர் திரு.சக்கரவர்த்தி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.அருண்குமார், உதவி பொறியாளர்கள் திரு.இப்ராகிம், திரு.சதிஷ், சிவகிரி வட்டாட்சியர் திரு.திரநாவுக்கரசு மற்றும் அலுவலர்கள், வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.